இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
பாராளுமன்றம்

சத்மெத்சித்ஹவுல சங்கம் (கூட்டிணைத்தல்)

சத்மெத்சித்ஹவுல சங்கத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்

களுத்துறை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ ஜயந்த சமரவீர
அவர்களால் 2015, திசெம்பர் மாதம் 11 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது

(2015, நவெம்பர் மாதம் 23 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)

பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது

[**49 ஆம் சட்டமூலம்**]

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

விலை : ரூபா 11.00 **தபாற் செலவு : ரூபா 10.00**

சத்மெத்சித்ஹவுல சங்கத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

முன்னுரை.

'' சத்மெத்சித்ஹவுல சங்கம்'' என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான சங்கமொன்று அதன் உறுப்பினர்களால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்க, சொல்லப்பட்ட சங்கத்துடன் தொடர்புபட்ட எல்லாக் குறிக்கோள்களையும் கருமங் களையும் பயனுற நிறைவேற்றிக் கொண்டுநடாத்தும் நோக்கத் திற்கென இதற்குமுன்னர் இலங்கையில் தாபிக்கப்பட்டுள்ளதாத லாலும் :

அத்துடன் சொல்லப்பட்ட சங்கமானது எந்தப் பல்வேறு குறிக் கோள்களுக்காகவும், கருமங்களுக்காகவும் தாபிக்கப்பட்டதோ அந்தப் பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் இதுவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும் கொண்டுநடாத்தியும் வந்துள்ள தாதலாலும், அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாத லாலும் அத்துடன் சொல்லப்பட்ட விண்ணப்பத்தை அனுமதித் தல் பொதுமக்களின் நன்மைக்காகவிருக்குமாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

சுருக்கப் பெயர் .

1. இச்சட்டம், 2015 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, சத்மெத்சித்ஹவுல சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

சத்மெத்சித் ஹவுல சங்கத்தைக் கூட்டிணைத்தல்.

2. (1) இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்தும் அதன்பின்னரும் (இதனகத்துப்பின்னர் ''சங்கம்'' எனக் குறிப்பீடுசெய்யப்படும்) சத்மெத்சித்ஹவுல சங்கத்தின் தற்போதைய உறுப்பினர்களாக உள்ளவர்களும் அத்துடன் இத்தால் அமைத்துருவாக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக, இதன்பின்னர் சேர்த்துக் கொள்ளப்படுபவர்களுமான அத்தகையோரான அத்தனை ஆட்களும் (இதனகத்துப்பின்னர் ''கூட்டுத்தாபனம்'' எனக் குறிப்பீடுசெய்யப்படும்) ''சத்மெத்சித்ஹவுல சங்கம்'' என்னும் பெயர்மகுடத்தின்கீழ் இடையறாவழியுரிமைகொண்ட கூட்டி ணைக்கப்பட்ட ஒரு குழுவாகவிருத்தல் வேண்டுமென்பதுடன், அப்பெயர்கொண்டு அது வழக்குத்தொடுக்கலாம் என்பதுடன், அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம் : அத்துடன் பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும், அதன் விருப்பப்படி அதனை மாற்றவும் முழுத்தத்துவமும், அதிகாரமும் கொண்டிருத்தலும் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனமானது, 1980 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க, வலிந்துதவு சமூக சேவை ஒழுங்கமைப்புக்கள் (பதிவு செய்தலும் மேற்பார்வை செய்தலும்) சட்டத்தின் கருத்தெல்லைக் குள்ளும் அதன் நோக்கத்துக்காகவும் வலிந்துதவு சமூகசேவை ஒழுங்கமைப்பொன்றாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அச்சட்டத்தின் ஏற்பாடுகள் கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமைசெய்வதிலும் மற்றும் அது தொடர்பிலும் ஏற்புடையன வாதலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்கள்.

3. (1) கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாயிருத்தல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :-

நிப்பான காமி பட்டிபதாவ என்பவற்றை அழுத்திக் கூறி அந்தக் குறிக்கோள்களை எய்துவதற்காக -

(அ) குருமார்களாகுவதற்கு பொருத்தமானவர்கள் எனக் காணப்பட்டுள்ளவர்களுக்கு பௌத்த குருமார்களாக வும், தசசில் மாதாக்களாகவும், அதிசீலா சமாதானய, அதிசமாதி சமாதானய மற்றும் அதி பிரக்ஞா சமாதானய போன்ற குருத்துவத்தை அளிப்பதற்கும் பின்பற்றுவதற்கும் ஊக்கமளித்தலும் அதற்கு ஆதரவை அளித்தலும் ;

(ஆ) சீல, சமாதி மற்றும் பிரக்ஞா என்பவற்றை அபிவிருத்தி செய்வதற்கு உபாசகாக்களுக்கும் உபாசிகாக்களுக்கு மான ஆதரவுக்கு ஊக்கமளித்தலும் ஆதரவளித்தலும் ;

(இ) அம் மடங்களில் புத்தரின் போதனைகளுக்கிணங்க கற்பிக்கப்பட்டவையும் பின்பற்றப்படுபவையுமான குறித்த தியான நுட்பங்களில் அறிவுறுத்தல்களைப் பின்பற்றுவதற்கு கூட்டுத்தாபனத்தால் பேணப்படும் மடங்களுடன் இணைந்து பௌத்த பின்பற்றாளர் களுக்கு உறுதியளித்தல் ;

(ஈ) முறையாகப் பேணப்படும் மேலே குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளின் நியதிகளின்படி அம்மடங்களில் வதிகின்ற பிக்குமார்களுக்கு ஆடைகள், சைவ உணவு களை தானமாக வழங்குதல், தங்குமிடம் மற்றும் மருத்துவ தேவைப்பாடுகளை வழங்குதல் ;

(உ) முறையாகப் பேணப்படும் மேலே குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளின் நியதிகளிபடி அம்மடங்களில் வதிகின்ற தசசில் மாதாக்களுக்கு ஆடைகள், சைவ உணவுகளை தானமாக வழங்குதல், தங்குமிடம் மற்றும் மருத்துவ தேவைப்பாடுகளை வழங்குதல் ;

(ஊ) முறையாகப் பேணப்படும் மேலே குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளின் நியதிகளின்படி அம்மடங்களில் வதிகின்ற உபாசகர்களுக்கு ஆடைகள், சைவ உணவு களை தானமாக வழங்குதல், தங்குமிடம் மற்றும் மருத்துவ தேவைப்பாடுகளை வழங்குதல் ;

(எ) முறையாகப் பேணப்படும் மேலே குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளின் நியதிகளின்படி அம்மடங்களில் வதிகின்ற உபாசிகாக்களுக்கு ஆடைகள் சைவ உணவு களை தானமாக வழங்குதல், தங்குமிடம் மற்றும் மருத்துவ தேவைப்பாடுகளை வழங்குதல் ;

(ஏ) அம்மடங்களில் பேணப்படும் சமாதானத்துக்கு பாதக மாக கருதப்படும் சூழ்நிலைகளில் போசகர்கள் சபை யின் சம்மதத்துடன் தலையிடுதல்.

அமைச்சின் அல்லது அரசாங்கத்தின் அல்லது மாகாணத்தின் திணைக்களத்தின் பணியுடன் முரண்பாடில்லா திருப்பதனைக் கூட்டுத்தாபனம் உறுதிப்படுத்துதல்.

4. கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்கள், கூட்டுத்தாபனத்தின் பணிக்கும் அரசாங்கத்தினால் அல்லது ஏதேனும் மாகாண சபையினால் நிறைவேற்றப்படும் ஏதேனும் பணிக்கும் இடையே முரண்பாடெதனையும் உருவாக்காத அத்தகைய முறையில் நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

கூட்டுத்தாப னத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.

5. (1) இச்சட்டத்தினதும் 9 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதி களினதும் ஏற்பாடுகளுக்கு அமைய, கூட்டுத்தாபனத்தின் அலு வல்களின் முகாமையும் நிர்வாகமும் 9 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதிகளுக்கிணங்க தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது நியமிக்கப்பட்டவர்களான தலைவர், செயலாளர், பொருளாளர் மற்றும் அத்தகைய எண்ணிக்கையினரைக் கொண்ட முகாமைத் துவ சபை ஒன்றினால் நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

(2) (அ) இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முந்திய நாளன்று பதவி வகிக்கின்ற சங்கத்தின் முகாமைத்துவ சபையானது, கூட்டுத் தாபனத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதிகளின்மூலம் ஏற்பாடுசெய்யப்பட்ட முறையில் நியமிக்கப்படும் அல்லது தேர்ந்தெடுக்கப்படும்வரை முதலாவது கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவ சபையாகத் தொழிற்படுதல் வேண்டும்.

(ஆ) கூட்டுத்தாபனத்தின் முதலாவது முகாமைத்துவ சபையானது இச்சட்டம் தொடங்குகின்ற தேதியிலிருந்து ஓர் ஆண்டிற்குள் நியமிக்கப்படுதல் வேண்டும் அல்லது தேர்ந் தெடுக்கப்படுதல் வேண்டும்.

(3) (அ) முகாமைத்துவ சபையின் பதவிதாங்குநர் ஒவ்வொருவரும் மூன்றாண்டு காலப்பகுதியொன்றுக்கு நியமிக் கப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய எவரேனும் பதவி தாங்குநர்கள் சொல்லப்பட்ட மூன்றாண்டுக் காலப்பகுதியானது கழிந்ததன்பின்னர் மீள்நியமனத்துக்கு அல்லது மீளத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு உரித்துடையவர்களாதல் வேண்டும்.

(ஆ) பதவிதாங்குநரின் இறப்பு, பதவி விலகுதல், உடற்றகுதி யீனம் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுதல் காரணமாக வெற்றிடமொன்று ஏற்படும் பட்சத்தில் முகாமைத்துவ சபை யானது அதன் விதிகளைக் கருத்திற்கொண்டு அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு ஆளொருவரைத் தேர்ந்தெடுத்தல் அல்லது நியமித்தல் வேண்டும்.

(இ) பந்தி (ஆ)வின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட ஆள் எந்த உறுப்பினரை அவர் பின்னுகின்றாரோ அந்த உறுப்பினரின் முடிவுறாதெஞ்சியுள்ள காலப்பகுதிக்கு மட்டுமே பதவிவகித்தல் வேண்டும்.

(4) குழுச்சபையின் செயல் அல்லது நடவடிக்கையெதுவும் அதன் உறுப்பினர்களுக்கிடையிலான வெற்றிடமொன்றின் நிலைத்திருப்பின் அல்லது அதன் எவரேனும் உறுப்பினரின் தேர்வின் அல்லது நியமனத்தின் ஏதேனும் குறைபாடு என்ற காரணத்தினால் மட்டும் வலிதற்றதாகாது.

போசகர்கள் குழாம்.

6. கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவம் மற்றும் நிருவாகத்தின் ஏற்புடைமை தொடர்பில் முகாமைத்துவ சபைக்கு மதியுரை வழங்குதற்கு போசகர்கள் குழாமொன்று 9 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட விதிகளுக்கிணங்க நியமிக்கப்படுதல் வேண்டும்.

ஆலோசனைக் குழு.

7. முகாமைத்துவ சபையினால் தீர்மானிக்கப்பட்டவாறான ஏதேனும் கருமம் தொடர்பில் கூட்டுத்தாபனத்துக்கு மதியுரை வழங்குவதற்கு ஆலோசனை குழுவொன்றை 9 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதிகளுக்கிணங்க நியமிக்கப்படுதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் தத்துவங்கள்.

8. இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறேதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய, கூட்டுத்தாபனம், பின்வரும் தத்துவங்களைக் கொண்டுள்ளது :-

(அ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்காகத் தேவைப்படக்கூடியவாறான காணிகள் அல்லது கட்டிடங்களை கொள்வனவு செய்வதற்கும், வாடகைக்கெடுக்கவும், நிருமாணிக்கவும், புனரமைக்கவும் அத்துடன் வேறு வகையில் பெறவும் மற்றும் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை மேம்படுத்தும் நோக்குடன் உசிதமானதெனக் கருதக்கூடியவாறு மதியுரைச் சபையின் அங்கீகாரத்தின் மீது முகாமைத்துவச் சபையால் தீர்மானிக்கப்பட்டவாறு கையுதிர்க்கவும் ;

(ஆ) பிணைப்பொறுப்புடனோ அல்லது பிணைப்பொறுப்பின்றியோ நிதிகளைக் கடனாகப் பெறுதல் அல்லது திரட்டுதல் மற்றும் காசாக அல்லது பொருளாக மானியக்கொடைகளையும், கொடைகளையும் அல்லது நன்கொடைகளையும் பெற்றுக்கொள்ளுதல் :

ஆயின், சபையானது கூட்டுத்தாபனத்திற்குச் செய்யப்பட்ட எல்லா வெளிநாட்டு மானியக்கொடைகள், கொடைகள் அல்லது நன்கொடைகள் தொடர்பிலும், நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அவ்வமைச்சரின் அமைச்சினது வெளிநாட்டு மூலவளங்கள் திணைக்களத்தின் எழுத்திலான முன்னங்கீகாரத்தைப் பெறுதல் வேண்டும் ;

(இ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்கு உடனடியாகத் தேவைப்படாத எவையேனும் நிதிகளை முகாமைத்துவ சபையானது தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய முறையில் முதலீடு செய்தல் ;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் அலுவலர்களையும் மற்றும் சேவையாளர்களையும் நியமித்தலும், தொழிலுக் கமர்த்துதலும், பதவி நீக்குதலும் அல்லது அவர்களின் சேவைகளை முடிவுறுத்தலும், அத்துடன் அவர்கள்மீது ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டைப் பிரயோகித்தலும் மற் றும் கூட்டுத்தாபனத்தினால் தீர்மானிக்கப்படக்கூடிய வாறான அத்தகைய சம்பளங்கள், படிகள் மற்றும் பணிக்கொடைகளை அவர்களுக்குச் செலுத்துதலும் ;

(உ) முகாமைத்துவச் சபையால் தீர்மானிக்கப்பட்டவாறான ஏதேனும் வங்கியில் நடப்பு, வைப்பு அல்லது வேறு ஏதேனும் கணக்குகளைத் திறத்தல், செயற்படுத்தல் மற்றும் மூடுதல் ;

(ஊ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்று வதற்கு அல்லது தத்துவங்களைப் பிரயோகிப்பதற்கு அவசியமானவாறான அத்தகைய எல்லா ஒப்பந் தங்களை அல்லது உடன்படிக்கைகளை கூட்டுத் தாபனத்தின் சார்பில் எவரேனும் அலுவலரினால் நேரடியாகவாயினுஞ்சரி அல்லது அவர்களின் ஊடாக வாயினுஞ்சரி செய்துகொள்ளுதல் புரிதல் அல்லது நிறைவேற்றுதல் ;

(எ) முகாமைத்துவச் சபையால் தீர்மானிக்கப்பட்டவாறான கூட்டுத்தாபனத்தின் பணிகளை நிறைவேற்றுவதற்கு அவசியமானவாறானவிடத்து மதியுரைச் சபை மற்றும் ஆலோசனைச் சபை உள்ளடங்கலான ஏதேனும் சபை, மற்றும் குழுவினை நியமித்தல் ;

(ஏ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்கு தேவைப்படும் நிதிகளை கடனாகப் பெறுதல் அல்லது திரட்டுதல் : அத்துடன்

(ஐ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை முறையாக பயனுள்ளவாறு நிறைவேற்றுவதற்கு அவசியமானவாறா னதும் உசிதமானதுமான எல்லாக் கருமங்களையும் செய்தல்.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

9. (1) கூட்டுத்தாபனத்தின் ஏதேனும் பொதுக்கூட்டமொன்றில் சமுகமளித்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் மூன்றில் இரண்டுக்குக் குறையாத பெரும்பான்மை வாக்குகளைக்கொண்டு பின்வரும் கருமங்கள் எல்லாவற்றுக்கும் அல்லது அவற்றுள் எதற்காகவும் இச்சட்டத்தினது அல்லது எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தினது ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாகவிராத விதிகளைக் காலத்துக்குக்காலம், ஆக்குதல் கூட்டுத்தாபனத்துக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும் :-

(அ) உறுப்பாண்மையை வகுப்பாக்கஞ்செய்தலும் உறுப்பினர்களைச் சேர்த்துக்கொள்ளுதலும் உறுப்பினர்கள் விலகுதலும் அவர்களை விலக்குதலும் அல்லது அவர்கள் பதவியிலிருந்து நீங்குதலும் மற்றும் உறுப்பினர்களினால் செலுத்தப்படற்பாலதான கட்டணங்களும் ;

(ஆ) முகாமைத்துவ சபையின் பதவிதாங்குநர்களைத் தேர்ந்தெடுத்தல் அல்லது பதவிதாங்குநர்கள் பதவியை வறிதாக்குதல் அல்லது அவர்களைப் பதவியிலிருந்து அகற்றுதல் மற்றும் அவர்களின் தத்துவங்களும் கடமைகளும் பணிகளும் ;

(இ) கூட்டுத்தாபனத்தின் பல்வேறு அலுவலர்கள், மற்றும் சேவையாளர்களின் நியமனத்திற்கான நியதிகளும் நிபந்தனைகளும் அவர்களின் தத்துவங்களும், பணிகளும் மற்றும் கடமைகளும் ;

(ஈ) முகாமைத்துவ சபையினது அல்லது அதன் மதியுரை சபை மற்றும் ஆலோசனைச் சபை உள்ளடங்கலான வேறு ஏதேனும் முகாமைத்துவ சபை அல்லது வேறு ஏதேனும் சபை அல்லது குழுவின் கூட்டங்களைக் கூட்டுதலிலும் அதனை நடாத்துதலிலும் பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கைமுறைகள் அத்தகைய கூட்டங்கள் பற்றிய அறிவித்தலும் நிகழ்ச்நிரலும் அதற்கான கூட்ட நடப்பெண்ணும் மற்றும் அவற்றில் அலுவல்களை நடாத்துதலும் ;

(உ) மதியுரை சபை, ஆலோசனைச் சபை மற்றும் கூட்டுத் தாபனம் உள்ளடங்கலான முகாமைத்துவ சபையினது அல்லது வேறு ஏதேனும் சபை அல்லது குழுவின் உறுப்பினராக இருப்பதற்கான தகைமைகளும் தகைமையீனங்களும் :

(ஊ) கூட்டுத்தாபனத்தின் ஆதனத்தின் நிர்வாகமும் முகாமையும் ; அத்துடன்

(எ) பொதுவாகக் கூட்டுத்தாபனத்தின் அலுவல்களின் முகாமையும், அதன் குறிக்கோள்களை எய்துதலும் அத்துடன் கூட்டுத்தாபனத்தைக் கலைத்தலும்.

(2) கூட்டுத்தாபனத்தால் ஆக்கப்பட்ட ஏதேனும் விதி இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் விதியொன்று ஆக்கப்பட்டதைப் போன்று அதேபோன்ற கூட்டத்திலும் அதேமுறையிலும் திருத்தப்படலாம், மாற்றப்படலாம், அதற்கு எதுவும் சேர்க்கப்படலாம் அல்லது இல்லாதொழிக்கப்படலாம்.

(3) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் எல்லா நேரங்களிலும் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கு அமைந்தோராதல் வேண்டும்.

(4) இப்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதிகள் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் நிதியம்.

10. (1) கூட்டுத்தாபனம், அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் கூட்டுத்தாபனத்திற்காகவும் மற்றும் அது தொடர்பாகவும் கொடை, மரணசாசனக்கொடை, நன்கொடை, ஒப்பப்பணம், உதவுதொகை, கட்டணங்கள் அல்லது மானியக்கொடை என்ற வகையாகப் பெறப்பட்ட எல்லாப் பணங்களும் முகாமைத்துவச் சபையினால் அங்கீகரிக்கப்படட ஒரு வங்கியில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளில் கூட்டுத்தாபனத்தின் வரவுக்கு வைப்புச் செய்யப்படுதல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின்கீழ் கூட்டுத்தாபனத்தின், தத்துவங்களையும், கடமைகளையும் மற்றும் பணிகளையும் பிரயோகித்தலிலும் புரிதலிலும் நிறைவேற்றுவதிலும் கூட்டுத்தாபனத்தினால் உறப்பட்ட ஏதேனும் செலவினங்களைக் கொடுத்துத் தீர்ப்பதற்குத் தேவைப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத் தொகைகளும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

கூட்டுத்தாபனம் அசைவுள்ள அசைவற்ற ஆதனத்தை வைத்திருக்கலாம்.

11. கூட்டுத்தாபனம் ஏதேனும் கொள்வனவு, மானியக் கொடை, கொடை, இறுதிவிருப்பாவணக் கையளிப்பு என்பவற்றின் பயனைக் கொண்டு அல்லது வேறுவகையில் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, கூட்டுத்தாபனத்துக்கு உரித்தாக வரக்கூடிய ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தை கொள்ளவும் வைத்திருக்கவும் சட்டப்படி இயன்றதாதலும் ஆற்றலுடையதாதலும் வேண்டுமென்பதுடன், அத்தகைய எல்லா ஆதனங்களும் இச்சட்டத்தின் நோக்கத்துக்காகவும் 9 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமையவும் அதனை விற்கவும், ஈடுவைக்கவும், குத்தகைக்குவிடவும், கொடுத்து மாற்றவும் அல்லது வேறு வகையில் கையுதிர்க்கவும் உள்ள தத்துவத்துடன் கூட்டுத்தாபனத்தால் வைத்திருக்கப்படுதலும் வேண்டும்.

பணங்களையும் ஆதனத்தையும் பயன்படுத்துதல்.

12. எவ்வாறாயினும் பெறப்பட்ட கூட்டுத்தாபனத்தின் பணங்களும் ஆதனங்களும் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை மேம்படுத்தும் நோக்காக மட்டுமே பயன்படுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், அதன் பாகம் எதுவும், பங்கிலாபம், மிகையூதியம் அல்லது இலாபம் என்ற வகையில் நேரடியாகவோ அல்லது நேரடியாகவல்லாமலோ கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களுக்குச் செலுத்தப்படுதலோ அல்லது கைமாற்றப்படுதலோ ஆகாது.

கணக்குகள் மற்றும் கணக்காய்வு.

13. (1) கூட்டுத்தாபனம், அதன் வருமானமும், செலவினமும், சொத்துக்களும் பொறுப்புக்களும் மற்றும் கூட்டுத்தாபனத்தின் வேறு எல்லாக் கொடுக்கல் வாங்கல்களும் பற்றிய முறையான கணக்குகள் வைத்திருக்கப்படச் செய்தல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள், அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் நியதிகளின்படி கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் அல்லது கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் நியமிக்கப்பட்ட தகைமைபெற்ற கணக்காய்வாளர் ஒருவரால் ஆண்டுதோறும் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

(3) இப்பிரிவின் நோக்கங்களுக்காக "தகைமைபெற்ற கணக்காய்வாளர்" என்பது-

(அ) இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறு ஏதேனும் நிறுவகத்தின் உறுப்பினராக இருப்பதோடு கணக்காளர் ஒருவராகத் தொழில் புரியவென அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் வழங்கப்பட்ட சான்றிதழ் ஒன்றைக் கொண்டவராக உள்ளவருமான தனியாள் ஒருவர் ; அல்லது

(ஆ) எந்தக் கணக்காளர் குழுமமொன்றின் ஒவ்வொரு வதிவுள்ள பங்காளரும் இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறு ஏதேனும் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராக விருப்பதோடு, கணக்காளர் ஒருவராகத் தொழில் புரியவென அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் வழங்கப்பட்ட சான்றிதழ் ஒன்றை உடையவராகவும் இருக்கின்றாரோ, அந்தக் கணக்காளர் குழுமம் ஒன்று,

என்று பொருள்படும்.

(4) கூட்டுத்தாபனத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

ஆண்டறிக்கை.

14. (1) முகாமைத்து சபையானது ஒவ்வொரு நிதியாண்டிற்கும் கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகள் பற்றிய அறிக்கையொன்றைத் தயாரித்தல் வேண்டுமென்பதுடன், புத்தசாசனம் மற்றும் சமய அலுவல்கள் என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளருக்கும், 1980 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க, வலிந்துதவு சமூகசேவை ஒழுங்கமைப்புக்கள் (பதிவு செய்தலும் மேற்பார்வை செய்தலும்) சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட வலிந்துதவு சமூகசேவை ஒழுங்கமைப்புக்கள் பதிவாளருக்கும், அத்தகைய அறிக்கை எந்த ஆண்டு தொடர்புடையதோ அந்த ஆண்டை அடுத்துறுகின்ற ஆண்டின் ஆறு மாதங்கள் முடிவடைவதற்கு முன்னர் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகள் பற்றிய கூற்றுடன் சேர்த்து அத்தகைய அறிக்கையைச் சமர்ப்பித்தலும் வேண்டும்.

(2) நிதியாண்டின்போது கூட்டுத்தாபனத்தினால் பெற்றுக் கொள்ளப்பட்ட வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு பணங்கள் தொடர்பாகத் தனிவேறான கூற்றொன்றை (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட அறிக்கையுடன் இணைக்கப்படுதல் வேண்டும்.

சங்கத்தினால் செலுத்தப்படற்பாலனவும் சங்கத்துக்குச் செலுத்தப்படற்பாலனவுமான கடன்கள்.

15. இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று உள்ளதாயிருக்கும் சங்கத்தின் எல்லாத் தனிசுகளும், பொறுப்புக்களும் இத்தால் அமைத்துருவாக்கப்படும் கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், அந்நாளன்று சங்கத்திற்கு வருமதியாகவுள்ள எல்லாத் தனிசுகளும் செலுத்தப்படற்பாலனவான ஒப்பப்பணங்களும், உதவுதொகைகளும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகக் கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.

16. (1) கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது, தலைவர், செயலாளர் மற்றும் பொருளாளர் முன்னிலையிலன்றி எத்தகையதுமான சாசனமெதிலும், பொறிக்கப்படுதலாகாது. அத்துடன் அவர்கள் தாம் சமுகமளித்தமைக்கு அடையாளமாக அச்சாசனத்தில் அவர்களது பெயர்களை எழுதிக் கையொப்பமிடுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய கையொப்பமிடுதலானது, எவரேனுமாள் சாட்சியாகக் கையொப்பமிடுவதினின்றும் தனிவேறான தாதலும் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது அத்தகைய சபையினால் முடிபு செய்யப்படக்கூடியவாறான முகாமைத்துவ சபையின் தலைவர், செயலாளர் அல்லது வேறு எவரேனும் பதவி தாங்குநரின் கட்டுக்காப்பில் இருத்தல் வேண்டும்.

கலைக்கப்பட்டதன்மீது எஞ்சியிருக்கின்ற ஆதனம்.

17. (1) கூட்டுத்தாபனம் கலைக்கப்பட்டதன்மீது, அதன் எல்லாக் கடன்களையும், பொறுப்புக்களையும் கொடுத்துத் தீர்த்த பின்னர் எத்தகையதுமான ஆதனம் ஏதுவும் எஞ்சியிருப்பின், அத்தகைய ஆதனம் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படுதல் ஆகாது. ஆனால் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களையொத்த குறிக்கோள்களையுடையதும், அதன் விதிகளின்படி அதன் உறுப்பினர்களிடையே ஏதேனும் வருமானத்தை அல்லது ஆதனத்தைப் பகிர்ந்தளித்தல் தடை செய்யப்பட்டுள்ளதுமான வேறு ஏதேனும் நிறுவனத்திற்குக் கொடுக்கப்படுதல் அல்லது கைமாற்றப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக, தோதான நிறுவனமானது, பொதுக்கூட்டமொன்றில் சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் பெரும்பான்மை வாக்குகளின் மூலம் கலைப்பதற்கு நேர்முன்னர் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

குடியரசினதும் ஏனையோரினதும் உரிமைகளைப் பேணல்.

18. இச்சட்டத்தில் அடங்கியுள்ளது எதுவும், இலங்கைக் குடியரசின் உரிமைகளையேனும், ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவினது உரிமைகளையேனும் பங்கப் படுத்துதலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

19. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்